Process Safety Beacon 20 YEARS ANNIVERSARY
Messages for Manufacturing Personnel
www.aiche.org/ccps/process-safety-beacon
An AIChE Technology Alliance CCPS Center for Chemical Process Safety
aiche.org/ccps
This issue sponsored by
DEKRA
www.dekra.us/process-safety

# கப்பல் தீ விபத்திலிருந்து செயல்முறை பாதுகாப்புக்கான பாடங்கள்

ஏப்ரல் 2022





ஜூலை 12, 2020, அன்று அமரிக்க கடற்படையின் போஹம் ரிச்சர்ட் என்ற கப்பல், கலி:ஃபோர்னியாவில் சான் டியாகோ என்ற இடத்தில நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொது அதில் மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டது.

5 நாட்களாக எரிந்த தீ கப்பலி ல் உள்ள மொத்த 15 தளங்களில் 11 தளங்களுகு பரவி விட்டது. வெப்பநிலை 1400 F (760 C ) அளவுக்கு இருந்தது. நிதி இழப்பு 3 பில்லியன் டாலர்க்கும் அதிகமாக கணக்கிடப்பட்டது. அந்த கப்பல் பயன்பாட்டிலுருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டது.

போஹம் ரிச்சர்ட் கப்பல் தீ விபத்துக்கு முன் கடந்த 12 வருடங்களில் கப்பல்களில் ஏற்பட்ட 15 தீ விபத்துகளை அமெரிக்க கடற்படை கூர்ந்து ஆராய்ந்தது. தீ ஏற்படுத்துவதிலும், அதை தீவிரமாக்குவதிலும் ஒரு சில விஷயங்கள் மீண்டும் மீண்டும் காரணிகளாக அமைந்துள்ளன என்பதை ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டது. அத்தகைய காரணிகள் கப்பலில் மட்டுமல்ல, தொழிசாலைகளிலும் தீயை ஏற்படுத்தி அதை தீவிரமாக பரவச்செய்யும் தன்மை கொண்டவை என்பதை நாம் உணர வேண்டும்.

Reference: "Major Fires Review Executive Summary, Commander, U. S. Fleet Forces Command and Commander, US Pacific Fleet, July 15, 2021 (Release October 19, 2021). https://www.documentcloud.org/documents/21089015-for-release-major-fires-review-19-oct-21

## உங்களுக்குத் தெரியுமா?

அமெரிக்க கடற்படை விசாரணையில் வரும் ஒரு சில விஷயங்கள் கெமிக்கல் தொழிற்சாலைகள் சார்ந்ததாக உள்ளன .

- அனுமதியின்றி பொருட்கள் கப்பல் உள்ளே கொண்டுவரப்பட்டன.
- தீப்பிடிக்கும், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் சரியான முறையில் கையாளப்படவில்லை.
- வழிமுறைகள் சரியாக கடைபிடிக்கபடவில்லை. ஆய்வுகள் திறம்பட நடைபெறவில்லை.
- தீ பிடிக்கும், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் அதிகப்படியான அளவில் சிறு சிறு கலன்களில் (Portable Containers) சேமித்து வைக்கப்பட்டிருந்தது. இதிலிருக்கும் ஆபத்தை யாரும் அறிந்திருக்கவில்லை.
- ஹாட் ஒர்க் பணிகளுக்கு விரிவான சீராய்வோ, ஒப்புதலோ, மேற்பார்வை முறைகளோ இல்லை. தற்காலிக தீ பாதுகாப்பு சாதனங்களோ, தீ ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்ற திட்டமோ இல்லை .
- தீயை கண்டறியவோ, தீ அணைப்பு கருவிகளை மற்றும் தகவல் தொடர்பு கருவிகளை இயக்கவோ கப்பல் தொழிலாளர்களிடம் போதிய திறமை இல்லை.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- உங்கள் தொழிற்சாலையில் தீப்பிடிக்க கூடிய, எரியக்கூடிய, அல்லது தீங்கு விளைவிக்க கூடிய பொருட்கள் சிறு சிறு கலன்களில் கையாளப்பட்டால் அவைகளை அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில மட்டுமே வைக்கப்பட வேண்டும். அந்த இடம் அரசு விதிமுறைகளையும் தரவுகளையும் (standard) கடைபிடித்து இருக்க வேண்டும்.
- உற்பத்தி பகுதியில் பயன்படாமல் உள்ள பொருட்களை உடனுக்குடன் மேற்கூறிய ஒதுக்கப்பட்ட இடத்திற்கு திருப்பி அனுப்பி விடவேண்டும்.
- ஹாட் ஒர்க் மற்றும் பிற வேலைகளுக்கு தொழிற்சாலை வகுத்துள்ள வழிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.
- ஹாட் ஒர்க் பற்றிய மற்ற பீகான்களை சீராய்வு செய்யவும் (6/2018, 5/2020, 8/2020, 8/2021, 3/2022, search www.aiche.org for "Beacon").
- அவசரநிலை ஒத்திகைகளில் பங்கெடுத்து உங்கள் பதிவுகளை தெரிவியுங்கள். இது அவசரநிலை வழிமுறைகளை மேம்படுத்த உதவும்.
- உங்கள் தொழிசாலையில் அவசரநிலை ஒத்திகை சமீபத்தில் நடக்கவில்லையெனில் அதை நடத்தும்படி பரிந்துரைக்கவும்.
- அமெரிக்க கடற்படையின் அறிக்கையை முழுதாக படித்து உங்கள் தொழிசாலைக்கான மேலும் பாடங்கள் உள்ளதா என்று பார்க்கவும்.

**செயல்முறை பாதுகாப்பு செய்திகள் மேலும் வரும்!**

©AIChE 2022. All rights reserved. Reproduction for non-commercial, educational purposes is encouraged. However, reproduction for any commercial purpose without express written consent of AIChE is strictly prohibited. Contact us at ccps_beacon@aiche.org or +1 646-495-1371.